சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்க்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கல்வி கட்டணங்களை வழங்கி ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை ( நிலை) எண் : 63 — நாள் : 25.06.2012
ஆனி11 திருவள்ளுவராண்டு 2043
படிக்கப்பட்டது.

1) அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000.
2) அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 09.01.2012.
3) ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கடித எண்.ஜ1/23463/2009, நாள் 11.01.2012.

-----

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/–க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு விதிக்கப்படும் கல்வி கட்டண அளவிற்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கி ஆணையிடப்பட்டது. இவ்வாணையின் மூலம் அளிக்கப்பட்ட கல்வி கட்டணச் சலுகை அரசு / அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் விதிக்கப்படும் கட்டண அளவிற்கே சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடத்தில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000''–ல் மாற்றம் செய்து, சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக்

கட்டணங்களையும் (Enrollment / Registration, Tuition, Games, Union, Library, Magazine, Medical Examination and such other fee compulsory payable by the scholar to the institution or university / board) அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் மத்திய அரசின் உதவித்தொகை திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஆதிதிராவிட நல ஆணையரின் கடிதத்தில் சுயநிதிக் கல்வி நிறுவனங்க்ளில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்து விதமான படிப்புகளுக்கும் இலவச/ கட்டண இருக்கைகளில் பயிலும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர்களுக்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு" நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் வழங்கலாம் என அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார். மேலும், சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ/மாணவிகளுக்கு அவ்வாறு வழங்குவதற்கு ரூ.1,23,20,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யுமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையர் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச/ கட்டண இருக்கைகளில் பயிலும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு" நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் 2012–2013 ஆம் கல்வி ஆண்டிலிருந்து மாநில அரசின் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் (State Post Matric Scholarship) வழங்கவும், இச்செலவினத்திற்கு கூடுதலாக ரூ.1,23,20,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையானது கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –01– ஆதிதிராவிடர் நலன் –277 – கல்வி– I – திட்டத்தில் சேராதது –AV - மெட்ரிக் படிப்பிற்கு மேல் படிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்பு படிப்பு உதவித் தொகை வழங்குவதற்கான திட்டம் 12 – படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 02–மெட்ரிக் படிப்புக்கு மேல் படிப்பு

(த.தொ.கு. 2225 01 277 AV 1220).

6. இத்திட்டத்தில் பயன் பெற கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ / மாணவியர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

7. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுத்துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடையில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கும் ஆணை நிதி (வ.செ. பொது-1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து நிதி (வ.செ. பொது-1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதி (ஆதி (ம) பந அ.சா.கு. எண். 11/கூ.செ.(எஸ்ஜெ)/12 நாள் 21.06.2012 மற்றும் கூ.நி.பே.எண். 457 (நானூற்று ஐம்பத்தேழு) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:-

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
இயக்குநர், பள்ளி கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை-6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /
அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை-6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:-

நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது-II) துறை, சென்னை-9.
பள்ளி கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/6/12
பிரிவு அலுவலர்.